# காரைக்கால் துறைமுகத்தில் சரக்குகள் கையாள நவீன இயந்திரம்

## முதல்வர் நாராயணசாமி துவக்கி வைத்தார்

காரைக்கால், அக். 31 –

காரைக்கால் மார்க் துறைமுகத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் சரக்குகள் கையாளும் இயந்திர முறையை முதல்வர் நாராயணசாமி துவக்கி வைத்தார்.

காரைக்கால் வாஞ்சூர் மார்க் துறைமுகம் சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில், அதி நவீன தொழில்நுட்பம் மற்றும் சரக்குகளை கையாளுவதற்கான இயந்திர மயமாக்கும் முறைகளை முதல்வர் நாராயணசாமி துவக்கி வைத்தார். அமைச்சர்கள் கமலக்கண்ணன், கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மார்க் துறைமுக இயக்குநர் ஜி.ஆர்.கே ரெட்டி வரவேற்றார். எம்.எல்.ஏ.,க்கள் அசனா, கீதா ஆனந்தன், துறைமுக பொது மேலாளர் ராஜேஷ்வர ரெட்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முதல்வர் நாராயணசாமி கூறியதாவது:

காரைக்கால் கப்பல் துறைமுகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி, ரூ.600 கோடி மதிப்பில் நிலக்கரி கன்வேயர் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டது. நிலக்கரி இறக்குமதி செய்யப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாக வந்த புகாரின் பேரில், இத்திட்டம் தொடங்கப்பட்டது. புதுச்சேரி மற்றும் காரைக்காலில் மணல் தட்டுப்பாடு உள்ளது. இதனால், தனியார் நிறுவனம் மூலம் வெளிநாட்டிலிருந்து மணல் கொண்டுவரப்பட்டு மணல் தட்டுப்பாட்டை போக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

புதுச்சேரிக்கு தனிக்கணக்கு தொடங்கப்பட்டதால், மத்திய அரசு வழங்கிய நிதி 70 சதவீதம் 30 சதவீதமாக குறைந்தது. தானே புயல் நிவாரணம், 7 வது ஊதியக்குழு நிதி, வங்கி கடன்களை தள்ளுபடி செய்யவில்லை. மக்கள் நல திட்டங்களுக்கு கிடைக்கவேண்டிய நிதியை மத்திய அரசு வழங்கவில்லை. இதனால் புதுச்சேரி வளர்ச்சிக்கு மத்திய அரசு தடையாக உள்ளது. மாற்றான் தாய் மனப்பான்மையுடன் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

### குக்கரால் சலசலப்பு

காரைக்கால் துறைமுகத்தை சுற்றியுள்ள கிராம மக்களுக்கு துறைமுக நிர்வாகம் மூலம் வழங்க 5000க்கும் மேற்பட்ட குக்கர் கொண்டுவரப்பட்டது.

விழாவில் முதல்வர் நாராயணசாமி பொதுமக்களுக்கு குக்கர் வழங்கும்போது, விழாவில் உள்ள சிலர், குக்கர் ஒரு சின்னமாக உள்ளது என கூறினர். இதனால் முதல்வர் ஒரு சிலருக்கு மட்டுமே குக்கர் வழங்கினார்.

இதனால் அப்பகுதியில் சிறு சலசலப்பு ஏற்பட்டது.



■ காரைக்கால் மார்க் துறைமுகத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் சரக்குகள் கையாளும் இயந்திர முறையை முதல்வர் நாராயணசாமி துவக்கி வைத்தார். அருகில், அமைச்சர்கள் கந்தசாமி, கமலக்கண்ணன்